உ

பாம்பன்

ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

அருளிச்செய்த

சண்முக கவசம்

S. V. முருகேச முதலியார்,

48, நைனியப்ப நாய்கன் தெருவு,
பார்க்டவுன், சென்னை-600003.

விலை] [30-காசு

ஆசிரியர் வரலாறு

செந்தமிழ்ப் பாண்டி நன்னாட்டில் இராமேச்சுரத்தை அடுத்த பாம்பன் பதியில் சைவ வேளாண் மரபில் சாத்தப்பப் பிள்ளையும் செங்கமல அம்மையாரும் செய்த தவமும் செவ்வேளருளும் பலித்ததென்ன. நமது சுவாமிகள் இற்றைக்குச் சுமார் 90 ஆண்டுகட்குமுன் அவதரித்தார். இளமையிலேயே தெய்வ பக்தி, பெரியாரிடம் அன்பு முதலிய நற்குணங்கள் அவரிடம் அமைந்திருந்தன. அங்குள்ள கல்லூரியிலும் சில ஆண்டுகள் பயின்று பரிசுகளும் பெற்றனர்.

ஒரு வெள்ளிநாட் காலையில் செவ்வேளையும் அருணகிரியையும் அமைத்துப்பாட விரும்பியதும், 'கங்கையைச் சடையில் பரித்து' என்ற மங்கலத் தொடரருளால் எழக் கண்டு களித்து அதனைத் தொடர்ந்து பாடுவாராயினர். நூறு பாடல்கள் முடிந்ததும் திருவருளாணையால் சேது மாதவய்யர்பால் கடக்கரோபதேசம் பெற்றனர். அச் செவ்வேட் பரமனருளாலேயே 35 நாட்கள் பிரப்பன் வலசை மயானத்தில் நிட்டை கூடி குருவாய்க் குமரனருள் ஒருமொழி யுணர்வு தீக்கையாதி பெற்றனர். அப்பெருமான் இவ்வாசிரியர்க்கு வமனபேதி வழக்குத் தொல்லை பகைவரிடர் ஆதிய நேர்ந்துழி யெல்லாம் நீக்கிக் காத்தறு முண்டன்றே !

சுவாமிகள் கலி 4993 ஆண்டில் நிகழ் கரஹு கார்த்திகைமீ 8உ ஞாயிரன்று திருவிராமேச்சுரத்தில் தமச்

குற்ற ஓரல்லலினின்றும். நீங்குமாறு சண்முக .கவசம் பாடி யருளினர் இதனைச் சுவாமிகளே தமது நித்திய பாராயண நூலாகக் கொண்டிருந்தனர் என்பது ஈண்டுக் கருதத்தக்க தாம். பின்பு சுவாமிகள் துறவு விரும்பி புறப்படப் போகும் போது பழநி செல்ல எண்ணுதலும் அவரது நண்பர் ''இறைவன் கட்டளையோ'' என்னலும், அவர் தடுத்து விடுவாரென அஞ்சி 'ஆம்' என ஒரு பொய் கூறினர். அது பொழுது இறைவன் சுட்டு விரலைத்தூக்கி பற்களை நெறித்துச்களித்துத் தமது கட்டளையின்றிப் பழநி வரலாகா தெனக் கடுங்கட்டளை யிட்டனர். அது சுவாமிகளது இறுதிநாள் வரையிலும் கிட்டாமலே போயதும் உலகப் பிரசித்தமே. இதனால் சுவாமிகள் இயற்றிய சாத்திர தோத்திர நூற்களனைத்தும் சத்திய வசன மென்னற்கு ஐயமுண்டோ!

பின்பு சுவாமிகள் சென்னை சேர்ந்து பலநாள் வதிந்து தினம் பூரணனருளால் கந்த சஷ்டி விழா, அருணகிரி விழா, மயூரவாகன சேவன விழா முதலியவற்றை நடாத்தி சுக்கில ஆண்டு வைகாசித் திங்கள் 12-ம் நாள் குருவாரத் தன்று (31-5-1929) தேய்பிறை சஷ்டி திதியில் செவ்வேள் சீரடி சேர்ந்து திருவான்மியூரிலுள்ள மயூரபுரத்துச் சமாதி கொண்டருளினர். ஷெ சுவாமிகளால் நிறுவப்பட்ட மஹா தேஜோ மண்டலத்தார் சுவாமிகள் நடத்திவந்த விழாவோடு மயூர வாகன சேவன விழாவை ஒவ்வொரு வருட மார்கழி வளர்பிறைப் பிரதமையிலும் சுவாமிகள் குருபூஜையை வைகாசி தேய்ப்பிறை சஷ்டியிலும் சிறப் பாகக் கொண்டாடி வருகின்றனர். அவற்றைத் தவறாது தரிசிப்பது நம் அனைவர்க்கும் கடமையன்றோ!

குமரகுருதாசன் திருவடி வாழ்க.

உ

சிவமயம்

ஓம் குமாரகுட்யோ நம:

திருச்சிற்றம்பலம்

சண்முக கவசம்

௧

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

அண்டமா யவனியாகி யறியொணாப் பொருளதாகித்
தொண்டர்கள் குருவு மாகித் துகளறு தெய்வமாகி

எண்டிசை போற்ற ன்ற வென்னருளீ ஞான
திண்டிறற் சரவ ணத்தான் றினமுமென் சிரசைக் காக்க 1

ஆதியாங் கயிலைச் செல்வனணிநெற்றி றன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் றானிரு நுதலைக் காக்க
சோதியாந் தணிகை யீசன் றுரிசிலா விழியைக் காக்க
நாதனுங் கார்த்தி கேயா னாசியை நயந்து காக்க 2

இருசெவி களையுஞ் செவ்வே ளியல்புடன் வாயை காக்க
முருகவேள் காக்க நாப்பன் முழுதுநற் குமரன் காக்க
துரிசறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ர மணியன் காக்க 3

ஈசனாம் வாகுலேய னெனதுகந் தரத்தைக் காக்க
தோறு தோள்வி லாவுந் திருமகண் மருகன் காக்க

ஆசிலா மார்பை யீசாறுயுதன் காக்க வென்றன்
ஏசிலா முழங்கை தன்னை யெழிற்குறிஞ் சிக்கோன் காக்க
உறுதியாய் முன்கை தன்னை யுமையிள மதலை காக்க
0தறுகணே றிடவே யென்கைத் தலத்தைமா முருகன் காக்க
புறங்கையை யயிலோன் காக்க பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்குமான் மருகன் காக்க பின்முது கைச்சேய் காக்க. 5

ஊணிறை வயிற்றை மஞ்ஞை யூர்த்தியோன் காக்க வம்புத் ௸
தோணிமிர் சுரேச னுந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினை யங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க வறுமுகன் குதத்தைக் காக்க. 6

எஞ்சிடா திடுப்பை வேலுக் கிறைவனார் காக்க காக்க
அஞ்ச00கனமொரி ரண்டு மரண்மகன் காக்க காக்க

0தறுகண்-அஞ்சாத்தன்மை. 00 ஜகநப்ரதேசம்.

விஞ்சிடுபொ ருட்காங்கேயன் விளரடித்தொடையைக் காக்க
செஞ்சர ணேச வாசன் றிமிருமுன் றொடையைக் காக்க.

ஏரகத் தேவ னென்று ளிருமுழங் காலுங் காக்க
சீருடைக்கணைக்கா றன்னைச் சீரலை வாய்த்தே காக்க
நேருடைப்பாடி ரண்டு நிகழ்பரங் கிரியன் காக்க
சீரிய குதிக்கா றன்னைத் திருச்சோலை மலையன் காக்க.

ஐயுறு மலையன் பாதத் தமர்பத்து விரலுங் காக்க
பையுறு பழநி நாத பரனகங் காலைக் காக்க
மெய்யுடன் முழுது மாதி விமலசண் முகவன் காக்க
தெய்வநா யகவி சாகன் றினமுமென் னெஞ்சைக் காக்க.

ஒலியெழ வுரத்த சத்தத் தொடுவரு பூதப் ரேதம்
பலிகொளி ராக்க தப்பேய் பலகணத் தேவையனாலும்

கிலிகொள வெனைவேல காக்க கெடுபார் செய்யுஞ் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருந்திடா தயில்வேல் காக்க. 10

ஓங்கிய சீற்ற மேகொண்டுவணிவில் வேல்சூ லங்கள்
தாங்கிய தண்ட மெஃகந் தடிபர சிட்டி யாதி
பாங்குடை யாயு தங்கள் பகைவரென் மேலே யோச்சின்
தீங்குசெய் யாமலென்னைத் திருக்கை வேல் காக்க காக்க.

ஔவிய முளரூ னுண்போ ரசடர்பே யரக்கர் புல்லர்
தெவ்வர்க ளெவரானாலுந் திடமுட னெனைமற் கட்டத்
தவ்வியே வருவா ராயிற் சராசர மெலாம் கரக்குங்
0கவ்வுடைச் சூர சண்டன் கையில் வேல் காக்க காக்க. 12

கடுவிடப் பாந்தள் சிங்கங் கரடிநாய் புலிமா யானை
கொடியகோ ணாய்குரங்கு கோலமார்ச் சாலஞ் சம்பு

0கவ்வு-'கபவு' என்பதன் விகாரம் கபவு-பெருமை

நடையுடை யெதனு லேனு நானிடர்ப் பட்டிடாமற்
சடிதியில் வடிவேல் காக்க சானவி முனைவேல் காக்க.

ஙகரமே போற்ற ஸ்ரீ இ ஞானவேல் காக்க வன்புல்
சிகரிதே ளண்டுக் காலி செய்யனே ருலப்பல்லி

நகமுடை நோந்தி பூரா னளிவண்டு புலியின் பூச்சி 14
உகமிசை யிவையா லெற்கோ ரூறிலாதைவேல் காக்க
சலத்திலுய் வன்மீ னேறு தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலுஞ் சலத்திலுந்தா னெடுந்துயர் தரற்கே யுள்ள

குலத்தினு ஞன்வ ருத்தங் கொண்டிடா தவ்வவ் வேளை
பலத்துட னிருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க. 15

ஞமலியம் பரியன் கைவே ணவக்கிர கக்கோள் காக்க
சுமவிழி நோய் கடந்த சூலையாக் கிராண ரோகம்

திமிர்கழல் வாதஞ் சோகை சிரமடி கர்ண ரோகம்
எமையணு காமலேபன் னிருபுயன் சயவேல் காக்க. 16

டமருகத் தடிபோ னெக்குந் தலையிடி கண்டமாலை
குமுறுவிப் புருதி குன்மங் குடல்வலி யீழை காசம்
நிமிரொணா திருத்தும் வெட்டை நீர்ப்பிர மேகமெல்லாம்
எமையடை யாமலேகுன் றெறிந்தவன் கைவேல் காக்க.

இரணக்கமில் லாத பித்த வெரிவுமா சுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்குங் குஷ்ட மூலவெண் முளை தீ மந்தம்
சணத்திலே கொல்லுஞ் சன்னி சாலமென் றறையு மிந்தப்
பிணிக்குல மெனையா ளாமற் பெருஞ்சத்திவடிவேல் காக்க.

தவனமா ரோகம் வாதஞ் சயித்திய மரோசகம் மெய்
சுவறவே செய்யு மூலச் சூடிளைப் புடற்று விக்கல்

அவதிசெய் பேதி சிழ்நோ யண்டவாதங்கள் சூலை
எவையுமென்னிடத் தெய்தாமலெம் பிரான்றினிவேல் காக்க.

நமைப்புறு கிரந்தி வீக்க நணுகிடு பாண்டு சோபம்
அமர்ந்திடு கருமை வெண்மை யாகுபஃறெழுநோய் கக்கல்

இமைக்குமுன் னுறுவலிப்போ டெழுபுடைப் பகந்தராதி
இமைப்பொழு தேனுமென்னை யெய்தாம லருள் வேல்காக்க.

பல்லது கடித்து மீசை படபடென் றேது டிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சங் காட்டியே யுருட்டி நோக்கி

எல்லினுங் கரியமேனி யெமபடர் வரினுமென்னை
ஒல்லையிற்றா காரி ஓம்ஐம் ரீம் வேல் காக்க 21

மண்ணிலு மரத்தின் மீது மலையிலு நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதுஞ் சாரிசெய் யூர்தி மீதும்

விண்ணிலும் பிலத்தி னுள்ளும் வேறெந்த விடத்துமென்னை
நண்ணிவந் தருளார் சஷ்டி நாதன் வேல் காக்க காக்க 22

யகாமே போர்சூ லேந்து நறும்புயன் வேன்முன் காக்க
அகரமே முதலா மீரா றம்பகன் வேல்பின் காக்க
சகரமோ டாறு மானோன் றன்கைவே னடுவிற் காக்க
சிகரமின் றேவ மோலி திகழைவேல் கீழ்மேல் காக்க, 23

ரஞ்சித மொழிதே வானை நாயகன் வல்லி பங்கன்
செஞ்சய வேல்கி ழக்கிற் றிறமுடன் காக்க வங்கி
விஞ்சிடு திசையின் ஞான வீரன்வேல் காக்க தேற்கில்
எஞ்சிடாக் கதிர்கா மத்தோ னிகலுடைக்கரவேல் காக்க. 24

லகரமே போற்கா ளிங்க னல்லுட னெளிய நின்று
தகரமர்த் தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்

நிகழெனை நிறுதி திக்கி னிலைபெறக் காக்க மேற்கில்
இகலயில் காக்க வாயு வினிற்குகன் கதிர்மேல் காக்க 25
வடதிசை தன்னிலீசன் மகனருட் டிருவேல் காக்க
விடையுடை யீசன் றிக்கில் வேதபோ தகன்வேல் காக்க

நடக்கையி லிருக்கு ஞான்று நவில்கையி னிமிர்கை யிற்கீழ்க்
சிடக்கையிற் றூங்கு ஞான்று கிரிதுளைத் துளவேல் காக்க.

இழந்துபோ காத வாழ்வை யீயுமுத் தையனார் கைவேல்
வழங்குநல் லூணுண் போது மால்விளை யாட்டின் போதும்
பழஞ்சுரர்போற்றும் பாதம் பணிந்து நெஞ்சடக்கும் போதுஞ்
செழுங்குணத் தொடே காக்க திடமுடன் மயிலுங் காக்க.

இளமையில் வாலி பத்தி லேறிடு வயோதி கத்தில்
வளரறு முகச்சி வன்றான் வந்தெனைக் காக்க காக்க
ஒளியெழு சாலை முன்னே லோஞ்சிவ காமி காக்க
தெளிநடு பிற்ப கற்கால் சிவகுரு நாதன் காக்க. 82

இற்குடைக் கோழித் தோகைக் கிறைமுனி ராவிற் காக்க
திறலுடைச் சூர்ப்ப கைத்தே திகழ்பிணி ராவிற் காக்க
நறவுசேர் தாட்சி லம்ப ணடுநிசி தன்னிற் காக்க
மறைதொழு குழக னெங்கோன் மாறுது காக்க காக்க, 29

இனமெனத் தொண்டரோடு மிணக்கிடுஞ் செட்டி காக்க
தனிமையிற் கூட்டந் தன்னிற் சரவண பவனார் காக்க
நனியனு பூதிசொன்ன நாதர்கோன் காக்க வித்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுடான் காக்க வந்தே. 30

————

சீனிவாச அச்சகம், சூளை, சென்னை-600007.

ஸ்தோத்திர புத்தகங்கள்

	ரூ.	பை
ஸ்ரீமத் பகவத்கீதை	1	50
நவக்ரஹ ஸ்தோத்திரம்	1	50
விஷ்ணு ஸஹர நாமம்	1	00
லலிதா ஸக்ஷஸ்ரநாமம்	1	00
தேவீ நித்யபாராயனம்	1	00
லக்ஷ்மி ஸஹஸ்ரநாமம்	1	00
சிவஸஹஸ்ரநாமம்	1	00
கணபதிஸஹஸ்ரநாமம்	1	00
ஸுப்ரமண்ய ஸகஸ்ரநாமம்	0	75
தியான அஷ்டோத்தர கதம்பம்	0	75
ஸ்ரீ ஜெயதேவர் அஷ்டபதீ	0	75
கல்பத்ரயம்	0	75
ஸ்ரீலலிதா த்ரிஸதீ ஸ்தோத்ரம்	0	50
யஜுர்வேத த்ரிகாலஸந்தியாவந்தனம்	0	50
ஸ்ரீ லக்ஷ்மீ அஷ்டோத்ரம்	0	00
ஸ்ரீதுளசி ஸ்தோத்திரம்	0	30
திருவிளக்கு ஸ்தோத்திரம்	0	25

சண்முகானந்த புத்தகசாலை.
48, நைனியப்ப நாய்க்கன் தெருவு,
பார்க்டவுன், சென்னை-3.